## மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழு
## தொழிற்சார் அறிவை மதிப்பிடும் பரீட்சை – மார்ச்/ ஏப்ரல் 2021
## முன் பள்ளி ஆசிரியர்
## தேசிய தொழிற் தகைமை – மட்டம் 4

**நேரம் - 03 மணித்தியாலங்கள்**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

- இந்த வினாத்தாள் 1 மற்றும் 2 என்றவாறான இரு பாகங்களைக் கொண்டது.
- இவ்வினாத்தாளில் பல்தேர்வு வினாக்களும் குறுகிய விடைகளைக் கொண்ட வினாக்களும் உள்ள டங்கியுள்ளன.
- பாகம் 1 இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் மிகப் பொருத்த மான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள விடையெழுதுந்தாளில் அதற்கு உரிய இலக்கத் துக்குரிய கூட்டில் (X) அடையாளத்தை இடவும்.
- பாகம் 2 இல் உள்ள முதலாம் வினா உள்ளடங்கலாக ஆறு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்
- இந்த வினாத்தாள் 09 gக்கங்களைக் கொண்டது

---

### பகுதி 1

1. முன் பிள்ளைப்பருவத்தில் வெற்றிகரமான எண்ணக்கரு விருத்தியில் முக்கிய காரணியாக அமைவது
   - i) எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்காக பிள்ளை உள மற்றும் உடல் சுகத்துடன் காணப்படவேண்டும்.
   - ii) அனைத்து தடைகளும் இன்றி பிள்ளையை ஊக்குவிப்பதற்கு ஏற்ற சூழல் இருத்தல் வேண்டும்
   - iii) பிள்ளையை ஈடுபடுத்தும் செயற்பாடுகளின் மூலம் அது உளஞ்சார்ந்த திருப்தியை அடைதல் வேண்டும்.
   - iv) பிழையற்ற எண்ணக்கருக்களை இனங்காணக் கூடியதாக ஆசிரியை அதனை நன்கு விளக்கப்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

   a. ( i, iii & iv )  b. ( ii, iii & iv )  c. ( i, ii & iv )  d. ( i, ii & iii )

2. விசேட தேவைகளை உடைய பிள்ளைகளுள் உளவியல் குறைபாடுள்ள பிள்ளைகள்ஈ
   - a. Autism கொண்ட பிள்ளைகள், பார்வைப் புலன் குறைந்த பிள்ளைகள், செவிப் புலன் குறைந்த பிள்ளைகள் ஆவர்
   - b. பார்வைப் புலன் குறைந்த, பேச்சுத் திறனற்ற செவிப் புலன் குறைந்த பிள்ளைகள் ஆவர்
   - c. காக்கை வலிப்பு, Autism கொண்ட பிள்ளைகள், மூளை வளர்ச்சி குறைந்த மற்றும் தீவிர செயற்பாடு கொண்ட பிள்ளைகள் ஆவர்.
   - d. Autism கொண்ட பிள்ளைகள், செவிப் புலன் குறைந்த பிள்ளைகள், மாறுபட்ட நடத்தை கொண்ட பிள்ளைகள் ஆவர்

3. பேச்சுத் திறனை விருத்தி செய்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம்,
   i) பிள்ளை பிறப்பிலிருந்தே படிப்படியாக பேச் கற்றுக் கொள்கிறது
   ii) பரந்து பட்ட தனது சுற்றாடலில் இருந்து தாம் பெறும் அனுபவங்களின் மூலம் அவர்கள் அதிகமாக கற்றுக் கொள்கின்றனர்.
   iii) பிள்ளைகளுடன் உரையாடும் போது அவர்கள் பெறுகின்ற ஊக்கங்களினால் பேசவதற்குத் தூண்டப்படுகின்றனர.
   iv) அவர்களின் பேச்சின் இடையிடையே வினாக்கள் வினவுவதன் மூலம் அவர்களது பேச்சு ஆற்றலைப் பரீட்சித்துக் கொள்ள முடியும்.

   a. ( i, iii & iv )  b. ( ii, iii & iv )  c. ( i, ii & iv )  d. ( i, ii & iii )

4. குறைபாடுடைய ஒருவரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம்
   a. 2011 ம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டம்
   b. 1996 ம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம்
   c. 1999 ம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டம்
   d. 2007 ம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டம்

5. வாசிப்புத் திறனை விருத்தி செய்வதற்காக முதன்மையாகத் வேைப்படுவது,,
   a. பிள்ளையினுள் வாசிப்பதற்கான ஆர்வம், இடமிருந்து வலது பக்கத்துக்கான பழக்கம், நல்ல பார்வை, சிறந்த பார்வைப் புலன்
   b. சிறந்த பார்வை, இடமிருந்து வலது பக்கத்துக்கான பழக்கம், பிள்ளையினுள் வாசிப்பதற்கான ஆர்வம், சிறப்பான கேள்விப் பிரித்தாள்கை
   c. பிள்ளையினுள் வாசிப்பதற்கான ஆர்வம், நல்ல பார்வை, இடமிருந்து வலது பக்கத்துக்கான பழக்கம், சிறப்பான கேள்விப் பிரித்தாள்கை
   d. சிறந்த பார்வை, இடமிருந்து வலது பக்கத்துக்கான பழக்கம், சிறப்பான கேள்விப் பிரித்தாள்கை, பிள்ளையினுள் வாசிப்பதற்கான ஆர்வம்,

6. முன் பள்ளி ஆசிரியை ஒருவருக்கு தொடர்பாடற் திறன் மிகவும் அவசியப்படுவது ஏன்,
   a. ஏதேனும் ஒன்றை நனன்கு விளங்கிக் கொள்வதற்காக விளக்கப்படுத்துவதற்கும் எளிமைப் படுத்துவதற்கும் தகவல்களையும் தர்க்க சிந்தனையைக் கட்டியெழுப்பவும் அவருக்கு தேர்ச்சி அவசியமாகிறது
   b. பெற்றாருக்கு தம் குழந்தைகளை வளர்த்தெடுப்பதற்காக அவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்காக தேவைப்படும் தகவல்களை பெற்றுக் கொள்வது அவசியமாகிறது
   c. பிள்ளைகளின் சுகாதாரத்தை விருத்தி செய்து கொள்வதற்கு உரியதான முன்னெடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்யவும் அவற்றை நடாத்திச் செல்லவும் அவசியமாவதால்
   d. முன் பள்ளியின் நடவடிக்கைகளுக்காக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு அது அவசியம் என்பதனால்

7. பியாஜேயின் படி உள்ளுணர்வுச் சிந்தனைப் பருவத்தில் உள்ள பிள்ளையில் காணக் கூடிய பண்பு
   a. தனது நம்பிக்கைக்கும் செயற்பாட்டுக்கும் கருத்து கூற முனைவார்
   b. பொருட்களின் பல பண்புகளின் கீழ் வகைப்படுத்த அவருக்கு முடியுமாக இருக்கும்
   c. ஒன்றுக்கு ஒன்று என்ற தொடர்பை மட்டும் அவரால் விளங்கிக் கொள்ள முடியும்
   d. மொழியைக் கற்கவும் பின்பற்றி விளையாடுவதற்கும் அவர் ஆரம்பிப்பார்.

8. முன் பள்ளிப்பருவ மாணவர்களிடையே பிரபலமான மூன்று கரடிகளின் கதையின் மூலமாக உங்களால் அறிமுகம் செய்யக் கூடிய மிக இலகுவான கணித எண்ணக்கரு,
    a. ஒழுங்கு வரிசை (Ordering)
    b. மாற்றமுறாமை (Invariance)
    c. அண்மை (Neighborhood / location)
    d. தொடர்பு (relationship)

9. பல்வேறு பொருட்களின் சிறப்பான பண்புகள் தொடர்பான கவனத்தை ஈடுபத்துவதன் மூலம் பிள்ளைகளின் ஒருவருக்கொருவர் மாறுபட்ட அறிவு மட்டத்தையும் ஆற்றல்களையும் இனங் கண்டுகொள்வதற்காக ஆசிரியைக்கு வாய்ப்பொன்றை உருவாக்கிக் கொள்ள கணித இயலுமான எண்ணக்கருவாக அமைவது,
    a. ஒன்றுக்கு ஒன்று இயைபுத்தன்மை
    b. வடிவங்கள்
    c. வகைப்படுத்தல்
    d. அண்மை

10. பாடத்திட்டத்தின் மூலம் முன் பள்ளிப்பருவ மாணவர்களிடையே கற்பித்தல் நடவடிக்கைளில் ஆசிரியையின் சிறப்பான கவனத்தைச் செலுத்த வேண்டியிருப்பது,
    a. கணித எண்ணக்கருக்கள் மற்றும் மொழித்திறன்களை விருத்தி செய்தல் தொடர்பாக
    b. சமூகமயமாக்கல் மூலம் நற்பிரஜை ஒருவரை உருவாக்குவதற்காக
    c. தொனிப் பொருள் ஒன்றின் கீழ் பல்வேறு பரப்புகளின் ஊடே அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை பெற்றுக் கொடுப்பதற்காக
    d. முறையாகப் பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு பாடத் திட்டம் இன்றி கற்பிக்க முடியும்

11. முன் பள்ளிப்பருவ மாணவரின் சித்திரப் படைப்புக்களை மதிப்பிடுகையில் ஆசிரியையின் சிறப்பான செலுத்த வேண்டியிருப்பது
    a. பாடத்திட்டத்துக்கு அமைவான தொனிப்பொளின் மீதாகும்
    b. மற்றைய பிள்ளைகளின் சித்திர ஆக்கங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்
    c. அந்த மாணவராலேயே இதற்கு முன் உருவாக்கப்பட்ட ஆக்கங்களுடன் ஒப்பிடுதல்
    d. பாடத்துடன் தொடர்புடைய கற்றல் விளைவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்
    கேள்வியையும்

12. கையாளுந் திறன் விருத்தி என்பதனால் கருதப்படுலது யாதெனில் ,
    a. பார்வை மற்றும் மணம் என்பவற்றை இணைப்பாக்கஞ் செய்யப் பழக்கப்படுத்தல்
    b. கண் மற்றும் கையை இணைப்பாக்கஞ் செய்யப் பழக்கப்படுத்தல்
    c. பார்வையையும் இணைப்பாக்கஞ் செய்யப் பழக்கப்படுத்தல்
    d. கேள்வியையும் பேச்சையும் இணைப்பாக்கஞ் செய்யப் பழக்கப்படுத்தல்

13. முன் பள்ளிப்பருவ மாணவரின் **முழுமையான விருத்திச்** செயற்பாட்டில் உள்ளடங்கும் பரப்பு
    a. உளவியல், மனவெழுச்சி, சமூக, ஆன்மீக, உடல் ரீதியான, அறிவு சார்ந்த பகுதிகளாகும்
    b. கல்வி சார்ந்த, சமூக, உளவியல், ஆன்மீக, உடல் ரீதியான, கலாசாரப் பகுதிகளாகும்
    c. சமூக, உளவியல், உடல் ரீதியான, மனவெழுச்சி, கலாசார மற்றும் கல்வி சார்ந்த, பகுதிகளாகும்
    d. மனவெழுச்சி, சமூக, உளவியல், ஆன்மீக உடல் ரீதியான, கலாசாரப் பகுதிகளாகும்

14. முன் பள்ளிப்பருவ மாணவருக்காக சுற்றாடற் கல்விச் செயற்பாடொன்றை செயற்படுத்தும் போது அவர்களை ஈடுபடுத்த வேண்டிய ஒழுங்கு வரிசையாவது,
    a. அவதானிப்பு, கண்டறிதல், சுயமான கருத்து வெளிப்பாடு, பிரச்சினைகளைத் தீர்த்தல்
    b. கண்டறிதல், அவதானிப்பு, சுயமான கருத்து வெளிப்பாடு, பிரச்சினைகளைத் தீர்த்தல்
    c. சுயமான கருத்து வெளிப்பாடு, கண்டறிதல், அவதானிப்பு, பிரச்சினைகளைத் தீர்த்தல்
    d. அவதானிப்பு, பிரச்சினைகளைத் தீர்த்தல், சுயமான கருத்து வெளிப்பாடு, கண்டறிதல்,

15. போசாக்கு எனப்படுவது யாது,˙,
    a. உடலின் வளர்ச்சி மற்றும் விருத்தியை அடைவதற்காக தேவைப்படும் உணவாகும்
    b. பல்வேறு உணவுவகைகளில் உள்ளடங்கியிருக்கும் போசணைப் பெறுமானங்களாகும்.
    c. உடலின் வளர்ச்சி மற்றும் விருத்தியை அடைவதற்காக தேவைப்படும் சக்திகளாகும்
    d. ஒரு நாளைக்கு பிள்ளையினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய உணவின் அளவாகும்.

16. மொண்டிசூரி தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளினதும் எண்ணக்கருக்களினதும் ஒழுங்குவரிசை,
    a. சுயாதீனத்தன்மை, அவதானிப்பு, பின் தொடர்வு, தயார் செய்யப்பட்ட சூழலும் ஈர்த்துக் கொள்ளும் மனமும்
    b. சுயாதீனத்தன்மை, அவதானிப்பு, திருத்துதல், தயார் செய்யப்பட்ட சூழல், பின் தொடர்வும் ஈர்த்துக் கொள்ளும் மனமும்
    c. அவதானிப்பு, சுயாதீனத்தன்மை, பின் தொடர்வு, திருத்துதல், இயற்கையான செய்யப்பட்ட சூழலும் ஈர்த்துக் கொள்ளும் மனமும்
    d. தயார் செய்யப்பட்ட சூழல், சுயாதீனத்தன்மை, பரீட்சித்தல், பின் தொடர்வு, திருத்துதலும் ஈர்த்துக் கொள்ளும் மனமும்

17. ஆசிரியையின் தொழிற்சார் பண்பு அபிவிருத்தியின் விளைதிறனாக அமைவது,
    a. தனிப்பட்ட, தொழிற்பண்பு, நிறுவனரீதியான மற்றும் துறையின் சுபீட்சம்
    b. தனக்கு தனது துறையின் தற்போதைய நிலையை விளங்கிக் கொண்டு அதில் நிலைத்திருப்பதாகும்
    c. ஆராய்ச்சி மற்றும் கற்றல் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை விளங்கிக் கொள்ளுதலாகும்
    d. துறையில் நிலையாக நிலைத்திருப்பதன் மூலம் தனிப்பட்ட முறையில் தனக்கு அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுதல்

18. உடலில் ஹேமோகுளோபின் உற்பத்தியையும் எலும்புகள் மற்றும் பற்களை அமைக்க உதவும் போசாக்குப் பொருள்
    a. புரதம்
    b. மாச்சத்து
    c. உயிர்ச்சத்து
    d. கனியங்கள்

19. முன் பள்ளி ஆசிரியை ஒருவர் மனித வள முகாமைத்துவம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருப்பது,
    a. முன் பள்ளிப்பருவ மாணவரை விளங்கிக் கொள்ளவும் அவர்களுளுக்கு உயர்மட்ட பெறுபேறுகளை பெற்றுக் கொடுப்பதற்காக
    b. பெற்றார் கூட்டங்களை நடாத்தி அவர்களுக்கு முன்பிள்ளைப் பருவ விருத்தியைப் பற்றி விழிப்புணர்வு செய்வதற்கு
    c. முன் பள்ளிப்பருவ மாணவர்கள் எமது கலாசாரத்தின் அரும் பெரும் செல்வங்கள் என்பது தொடர்பில் அறிந்து கொள்வதற்கு
    d. முன்பள்ளிக் கலாசாரத்தின் உறுப்பினர் என்றவகையில் ஏனையோருடன் ஒத்துழைப்புடன் பொதுக் குறிக்கோளுக்காக செயற்படுவதற்கு

20. நீரில் கரையாத உயிர்ச்சத்து
    a. A, B, C, K
    b. B, A, D, C
    c. C, A, D, K
    d. A, D, E, K

21. “நர்சரி” பாடசாலைகளின் ஸ்தாபகரான அதே நேரம், பிள்ளைக் கல்வியின் அடிப்படை அத்திவாரம் முன் பள்ளிக் கல்வியாக அமைதல் வேண்டும் என்ற கருத்தை முதன் முதலாக முன்வைத்தவர்,
    a. மாரியா மொண்டசூரி
    b. ∴பிரெடரிக் ∴புரோபல்
    c. மார்கரட் மக்மிலன்
    d. கேர்ட் லூாவின்

22. சம நிலையான உணவு வேளை எனப்படுவது,
    a. ஒரு வேளைக்குத் தேவையான சரியான கலோரிப் பெறுமானங்கள் அடங்கிய உணவாகும்
    b. சரியான விகிதத்துடன் போசணைப் பதார்த்தங்கள் உள்ளடங்கிய உணவாகும்
    c. அனைத்து போசணைப் பதார்த்தங்களும் உள்ளடங்கிய உணவாகும்
    d. உடலின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் தேவையான உணவாகும்

23. பெற்றாருடன் கருத்து வேறுபாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஆசிரியை,
    a. சம்பந்தப்பட்ட தரபாருடனான தொடர்புகளைத் துண்டித்தல் வேண்டும்
    b. மேல் முகாமைத்துவத்துக்கு அறிவிக்க ஆவன செய்தல் வேண்டும்
    c. சக ஆசிரியருக்கு அறிவித்து அவர்களது அறிவுறுத்தலுக்கு அமைய செயற்பட வேண்டும்
    d. தனது வகுப்பில் உள்ள மாணவருடன் அது பற்றிக் கலந்துரையாட வேண்டும்.

24. உயிர்ச்சத்து “யு” குறைபாட்டு நோயின் அறிகுறிகள்,
    a. கண்ணின் டிவைழவள மருக்கள் ஏற்படுதல்
    b. உடல் வெளிறுதல்
    c. உணவில் வெறுப்பேற்படுதல்
    d. உடலின் தசைகள் பலவீனமாதல்

25. பிள்ளையினால் தாள் ஒன்றில் கீறப்பட்ட முறைசாராத குறிப்பு பின்வருதுமாறு காணப்படுகிறது



இந்தக் கிறுக்கல் உரித்தாவது எவ்வாறான வேறுபாடுகளின் கீழ் அமையும்?

a. முறை சார்ந்த கிறுக்கல்
b. முறைசாராத கிறுக்கல்
c. கட்டுப்பாட்டுடனான கிறுக்கல்
d. பெயரிடப்பட்ட ஒரு வகைக் கிறுக்கல்

26. வகுப்பில் சித்திர செயற்பாட்டின்போது செயற்பாட்டில் அக்கறைகாட்டாத மாணவர் ஒருவரை நீங்கள் சந்திக்கிறீர்கள். செயற்பாட்டில் அவருக்கு அக்கறையில் விருத்தியை ஏற்படுத்து வதற்காக எடுக்க் கூடிய நடவடிக்கை

1. மாணவருடன் நெருக்கமான மற்றும் நேயமான தொடர்பைக் கட்டியெழுப்பல்
2. மாணவருள் உற்சாகத்தையும் விருப்பையும் ஏற்படுத்தல்
3. அவருக்கு உரையாடலில் விருப்பை உருவாக்கநிறைய வினாக்கள் கேட்டல்
4. இந்த நடத்தைக்கான பின்னணியை விளங்கிக் கொள்ளல்

a. 1 உம் 2 உம் மாத்திரம்
b. 2,3 உம் 4 உம் மாத்திரம்
c. 1,2 உம் 4 உம் மாத்திரம்
d. 1 உம் 2 உம் மாத்திரம்

27. ஆய்வு என்பதனால் அறியப்படுவது

a. நிலைமையை பரிசீலனை செய்தவாறு பிரச்சினையைத் தீர்த்தல்
b. செயற்பாட்டின் ஊடாக அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல்
c. கமாணவரின் சுற்றாடல் மாறுவதை அவதானித்தல்
d. நடைமுறையில் உள்ள நிலைமையை பரிசோதனைக்கு உள்ளாக்குதல்

28. “ஸ்கீமா” (schema) எனப்படுவது

a. ஒரு உணர்வாகும்
b. மனவெழுச்சியாகும்
c. மனவியல்புகளில் ஒன்றாகும்
d. எண்ணக்கருவாகும்

29. வருடாந்த கலை நிகழ்ச்சியென்றின் முக்கிய நோக்கமாவக அமைய வேண்டியது,

I. மாணவருக்கு அவர்களது திறன்களை பெற்றாருக்கு வெளிப்படுத்திக் காட்டுவது
II. மாணவரின் சமநிலையான ஆளுமை வளர்ச்சியை ஏற்படுத்தல்
III. மாணவரின் ஒற்றுமை மற்றும் குழு உணர்வின் விருத்திக்காக
IV. மாணவருள் அழகியணுர்வுக்கான வாய்ப்பை ஏற்படுத்தல்

a. ( i, iii & iv )  b. ( ii, iii & iv )  c. ( i, ii & iv )  d. ( i, ii & iii )

30. முன்பள்ளி மாணவர்கள் எப்போதும் வினாக்களை வினவியவாறு விசாரிப்பது,

a. தமது சுற்றாடலை நன்கு விளங்கிக் கொள்வதற்காக
b. எண்ணக்கரு தொடர்பான தமது பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக
c. தனக்கும் ஏதாவது தெரியும் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக
d. வயது மூத்தோரை களைப்புக்கு உள்ளாக்குவதற்காக

( 1 x 30 = 30 புள்ளிகள்)

## பகுதி 2

**முதலாம் வினா உள்ளடங்கலாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்**

1.
   i. முன் பள்ளிப் பாடசாலையொன்றை நிறுவும்போதும் அதனை தொழிற்படுத்தும் போதும் தொடர்பு கொள்ள வேண்டிய அரச நிறுவனங்கள் யாவை ? (4 புள்ளிகள்)
   ii. மேற் கூறப்பட்ட ஒவ்வொரு விடயங்களையும் தெரிவு செய்வதற்கு ஏதுவாகும் 4 காரணிகள் வீதம் குறிப்பிடவும் (6 புள்ளிகள்)
   iii. முன் பள்ளிப் பாடசாலையொன்றினுள் கற்பித்தல் செயற்பாடுகளை விளைதிறனாக்குவதற்காக பேணப்படவேண்டிய பௌதிக வளங்கள் ஐந்தினைப் பெயரிடவும் (5 புள்ளிகள்)

2. பின்வரும் அட்டவணையைக் கொண்டு விடையளிக்கவும்

   i. முன் பிள்ளைப் பருவ பிள்ளைகளின் உளவியக்க வேறுபாடுகளைப் பெயரிடவும் ? (2 புள்ளிகள்)
   ii. அத்தகைய வேறுபாடுகளுக்காக 2 செயற்பாடுகள் வீதம் குறிப்பிடவும் (4 புள்ளிகள்)
   iii. ஒவ்வொரு வேறுபாட்டுக்காகவும் 1 செயற்பாடுவீதம் கொண்டு பிள்ளைகளுடன் செய்முறையில் இயங்கும் விதத்தை விளக்கவும் (5 புள்ளிகள்)

2.1 2.11 2.111

| பரப்பளவு வேறுபாடுகள் | செயற்பாடுகள் | செய்முறைச் செயற்பாடுகள் |
|---|---|---|
| 1 | 1.1<br>1.2 | 1. |
| 2 | 2.1<br>2.2 | 2 |

3.
   i. மொழித்திறன்களைப் பெயரிடவும் (3 புள்ளிகள்)
   ii. மேற்கூறப்பட்ட மொழித் திறன்களை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்கவும் (4 புள்ளிகள்)
   iii. உன்னிப்பாகச் செவிமடுத்தலுக்கும் உள்ளுணர்வுடன் செவிமடுத்தலுக்கும் இடையேயான வித்தியாசத்தை உதாரணங்களுடன் விளக்கவும் (4 புள்ளிகள்)

4. முன் பள்ளிப் பிள்ளைகளுக்கு எண்களை அறிமுகஞ் செய்வது ஒருவித ஒழுங்கு முறையில் செய்யப்பட வேண்டியதொன்றாகும். இதனைச் செயலாற்ற வேண்டியதும் ஒரு தொடர் ஒழுங்கிலுமாகும்.

   i. இத் தருணத்தில் நீங்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு வரிசை எத்கையது என்பதை குறிப்பிடவும் (5 புள்ளிகள்)

   ii. அவ்வாறான ஒழுங்கு வரிசையில் இரு சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்து அவற்றை உங்கள் மாணவருக்கு எவ்வாறு முன்வைப்பீர்கள் என்பதையும் அதற்காகப் பயன்படுத்தும் கற்பித்தல் சாதனங்கள் யாவை என்பதையும் சுருக்மாக விபரிக்கவும் (6 புள்ளிகள்)

5. முன் பள்ளிப் பிள்ளைகளுக்கு பெருமளவில் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பது இன்றியமையாததாகும்.

   i. "அனுபவம்" என்பதனால் நீங்கள் கருதுவது யாது ? (4 புள்ளிகள்)

   ii. பல்வேறு அனுபவங்களினூடே பிள்ளைகள் அடைகின்ற 5 நன்மைகளைக் குறிப்பிடவும் (5 புள்ளிகள்)

   iii. பல்வேறு அனுபவங்களை வழங்குவதற்கான வாய்ப்புக்களைத் திட்டமிடும் போது வகுப்பாசிரியை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான இரு விடயங்களைக் குறிப்பிடவும். (2 புள்ளிகள்)

6.

   i. உடலுக்கு கிடைக்கும் சக்திக்கு அமைய உணவு வகையீட்டைப் பெயரிடவும் (4 புள்ளிகள்)

   ii. ஒவ்வொரு வகைக்குமாக 4 உணவு வகைகள் வீதம் எழுதவும் (4 புள்ளிகள்)

   iii. முன் பள்ளி ஆசிரியை என்றவகையில் இந்த அறிவை செயற்படுத்திக் கொள்வது எவ்வாறு? (3 புள்ளிகள்)

7.

   i. உலக சுகாதார நிறுவனத்தின் தனியாள் சுகாதாரம் தொடர்பான வரைவிலக்கணம் யாது ? (4 புள்ளிகள்)

   ii. இந்த வரைவிலக்கணத்துக்கு அமைய இசைந்தவாறு, கொரோனா நிலைமையின் கீழ் முன் பள்ளியினுள் சிறந்த சுகாதார நிர்வாகத்தைக் கொண்டு கெசல்வதற்காக முன் பள்ளி ஆசிரியை என்றவகையில் நீங்கள் செயற்பட வேண்டியது எவ்வாறு என்பதை ஒவ்வொரு விடயங்களுக்கு கீழேயும்விபரிக்கவும். (7 புள்ளிகள்)

8. மஹாத்மா காந்தியவர்கள் முறையான கல்வி முறையின் கீழ் நற் பிரஜைகளைக் கொண்ட சமுதாயமொன்றுக்காக பெரிதும் அக்கறை செலுத்தியவராவார்.

   i. தனியொருவரின் முழு அபிவிருத்தி மற்றும் ஆளுமை விருத்திக்குமான அவரது தத்துவம் யாது? (6 புள்ளிகள்)

   ii. முறையான கல்விக்காக அவர் நோக்கிய வேலைத் திட்டம் எத்தகையது? (5 புள்ளிகள்)